# திருவேற்காடு நகராட்சி
# நகர்மன்ற அவசரக் கூட்டம்

**2020 ஆம் ஆண்டு மே மாதம் 18ம் நாள் திங்கட்கிழமை மாலை 05.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

**நாள்: 18.05.2020**

---

## பொருள் எண். 1

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், (covid 19) என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம், அவர்களின் அறிவுரையின்படியும் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் தினசரி பொது மக்களின் பாதுகாப்பினை கருதி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும், பணிகளையும் அலுவலகத்திற்கு சமர்பிக்க ஏதுவாக புகைப்படங்கள் அடங்கிய ஆல்பம் மற்றும் வீடியோ கேசட் பதிவு செய்து தருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளவதற்கு 144 தடை உத்திரவு அமுலில் பிறப்பிக்கட்டுள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், கொரோனா வைரஸ் – தொற்று நோய் வேகமாக பரவும் காலமாக உள்ளதாலும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் –1920 பிரிவு 15– ன் கீழ் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர், தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொண்டு ஆவணம் தயாரிக்க ஆகும் செலவீனம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்று பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1095** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண். 2

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், (covid 19) என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு கண்காணிப்பு அலுவலர், திருவள்ளூர் மாவட்டம் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம், அவர்களின் ஆய்வு கூட்ட அறிவிப்பின்படி தினசரி கொரோனா வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்புகள் மற்றும் அப்பகுதியை சுற்றிலும் உள்ள பொது மக்களின் விவரங்கள் குறித்த கணக்கெடுப்பு பணிமேற்கொண்டு நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தியதற்கிணங்க புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதமாகும் என்பதாலும், கொரோனா வைரஸ் – தொற்று நோய் வேகமாக பரவும் காலமாக உள்ளதாலும், தற்போது அரசினால் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளூர் மற்றும் வெளியூர், அங்கீகரிக்கப்பட்ட

மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் 40 நபர்களை கொண்டு கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் குறிப்பின் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து பணியின் அவசர அவசியம் கருதி மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகம் பாதித்த பகுதிகளில் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளவும் இதற்கென செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>ந.க. எண்.1136/2020/எச்1.</u>**

**அலுவலக குறிப்பு:–**

அ) அவசர அவசியத்தினை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1096** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 3</u>

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (covid –19) தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் நகரராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் பல்வேறு கூட்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சியில் பல்வேறு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இந்நராட்சி 28.50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும் மேலும் சென்னை பெருமாநகராட்சியை ஒட்டிய நகராட்சியாகவும் இந்நகராட்சியின் மக்கள் தொகை சுமார் ஒரு இலட்சம் ஆகும். இந்நகராட்சியில் தூய்மை பணிகளுக்கு 24 நிரந்தர துப்புரவு பணியாளர்களை பணியிடங்கள் மட்டும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சிக்கு அளவு கோலின்படி (Norms) 316 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் இந்நிலையில் பணியாளர்கள் பற்றாக்குறையினால் நகராட்சிகள் நிர்வாக ஆணையர், சென்னை–5. அவர்களின் செயல் முறை ந.க.எண்.மு.னுளை No.2477/P3/2017 நாள்.01.03.2017–ன்படி வெளிக்கொணர்வு முறையில் 192 பணியாளர்கள் நியமித்து கொள்ள உத்திரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மானம் எண்.134, நாள்.31.05.2017 அனுமதியின்படி இவ்வலுவலக செயல்முறை **ந.க.எண்.1136/2015/எச்1 நாள்.06.07.2017–** ன்படி **SRINIVAS WASTE MANAGEMENT SERVICES (PVT) LTD** நிறுவனத்திற்கு 192 பணியாளர்களை (Out sourcing) வெளிகொணர்வு முறையில் சப்ளை செய்திட ஓர் ஆண்டிற்கு அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், மேற்படி நிறுவனத்தின் செயல்பாடுகள் சிறந்த முறையில் ஒப்பந்த விதிகளுக்குட்பட்டும் உயர் அலுவலர்களின் உத்திரவுகளை பின்பற்றியும் பொது சுகாதாரப் பணியில் எவ்வித தொய்வும் ஏற்படாமல் பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் நல்ல முறையில் பணி புரிந்தமையால் மேற்படி நிறுவனத்திற்கு ஒப்பந்த நிபந்தனைகளின்படி 15.07.2018 முதல் 14.07.2020 வரை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படி நிறுவனத்தாருக்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டு சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில் இந்நகராட்சியில் தற்போது கொரோனா வைரஸ் அதிகமாக பரவி வருவதாலும் மேலும், தொற்று நோய் பாதித்து தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எண்ணிக்கை தினசரி அதிகமாகி வருவதாலும் பொது சுகாதார பணிகள் மேம்பாடு அடைந்திடவும் மற்றும் கண்காணித்திடவும், நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்பாதாலும் மேலும் தற்போது மத்திய மாநில அரசினால் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ள நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி கொரோனா நோயினை கட்டுப்படுத்திட ஏதுவாக தற்போது **SRINIVAS WASTE MANAGEMENT SERVICES PVT LTD** நிறுவனத்தினை 192 தூய்மை பணியாளர்களுடன் கூடுதலாக துப்புரவு ஆய்வாளர் பட்டய படிப்பு தேர்ச்சி பெற்ற மூன்று தகுதியான துப்புரவு ஆய்வாளர்களை பணியில் அமர்த்தி இந்நகராட்சிக்கு வழங்கிட **SRINIVAS WASTE MANAGEMENT** நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கவும், மற்றும்

இதற்கென கூடுதல் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.1136/2017/எச்1**

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1097** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 4**

திருவேற்காடு நகராட்சி 18 வார்டுகளை கொண்ட நகராட்சியாகும். இந்நகராட்சி பகுதி 28.50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும் மேலும், இந்நகராட்சி பகுதியில் தினசரி மக்கும் மற்றும் மக்காத தன்மை கொண்ட குப்பைகள் 28.82 மெட்ரிக் டன் அளவு சேகரம் செய்யப்படுகிறது. தற்போது இந்நகராட்சியின் மக்கள் தொகை சுமார் 89164 ஆகும். தற்போது இந்நகராட்சி பகுதியில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்று நோயினை கட்டுப்படுத்தவும் நகராட்சி பகுதி முழுவதும் அனைத்து வார்டுகளிலும் கிருமி நாசினியை தெளிக்க வேண்டியது அவசியமாகிறது எனவும் நகராட்சி பகுதியில் மிக விரைவாகவும் அனைத்து பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்கவும் டிராக்டருடன் கூடிய கிருமி நாசினி தெளிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்து வழங்கிட துப்புரவு ஆய்வாளரால் கேட்டு கொண்டுள்ளபடி நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் சார்ந்த பணி என்பதால் தற்போது 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாலும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட காலதாமதம் ஆகும் என்பதால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி கொரோனா வைரஸ் கட்டுப்படுத்திட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொண்டு டிராக்டர் மற்றும் தெளிப்பான் வாங்கி கொள்ள ஆணையர் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து. டிராக்டருடன் கூடிய கிருமி நாசினி தெளிக்கும் இயந்திரம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினரிடமிருந்து கொள்முதல் செய்தமைக்கும் இதற்கென செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. **ந.க.எண். 1928/2020/எச்1**

**அலுவலக குறிப்பு:—**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டு டிராக்டர் மற்றும் மருந்து தெளிப்பான் வாங்கியதை மன்றம் ஏற்று அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1098** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 5**

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (Covid 19) தொற்றுநோய் பரவாமல் தடுக்க நகராட்சி பகுதி முழுவதும் **லைசால்** என்னும் கிருமி நாசினி இருபக்கமும் தெளிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், மற்றும் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர், மற்றும் துணை இயக்குனர், பொது சுகாதாரம் திருவள்ளூர், ஆகியோரின் அறிவுரைகளின்படி சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும் , நகராட்சியில் போதிய அளவு **லைசால்** இருப்பு இல்லாததாலும் மத்திய, மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் பணியின் அவசர அவசியத்தை கருதியும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதமாகும் என்பதாலும் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவும் காலமாக உள்ளதாலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஏற்கனவே லைசால் என்னும் கிருமி நாசினி சப்ளை செய்ய குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனமான ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங் நிறுவனத்திடமே ஏற்கனவே வழங்கப்பட்ட விலைப்புள்ளிகளின்படியே **லைசால்** கிருமி நாசினி

**2,500 லிட்டர்** சப்ளை செய்ய உத்திரவு வழங்கவும், இதற்கென ஆகும் தோராய செலவீனம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1099** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண். 6

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் பரவாமல் தடுக்கவும், மற்றும் பேருந்து நிலையம் சமுதாய கூடங்கள், வணிக வளாங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்த நகராட்சிகள் நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் அறிவுரைகளின்படி தூய்மை பணியாளர்கள் பாதுகாப்புடன் பணியாற்றிடவும், கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் பாதுகாப்புடன் தூய்மை பணி ஆற்றிடவும் **பாதுகாப்பு கவச உடை (PPE)** இருப்பு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து நகராட்சி பகுதியில் தொடர்ந்து கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகமாகி வருவதால் முழு அளவிலான பாதுகாப்பு கவச உடை (PPE) போதிய அளவு நகராட்சியில் இருப்பு இல்லாததாலும், 1000 எண்ணிக்கையில் முழு அளவிலான பாதுகாப்பு கவச உடை (PPE) பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும், மேலும் கொரோனா வைரஸ் – தொற்று நோய் வேகமாக பரவும் காலமாக உள்ளதாலும் தற்போது மத்திய மாநில அரசுகள் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நடைமுறையில் உள்ளதால், புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும் நகராட்சி ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து ஏற்கெனவே உள்ளூர் மற்றும் வெளியூர், தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரியதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனமான **Sri Balaji Marketing** ஏற்கெனவே வழங்கிய அதே விலைவிகிதத்தின்படி பணிகள் மேற்கொண்டதையும் இதற்கென செலவீனம் வருவாய் நிதியில் மேற்கொண்டதையும் மன்றத்தின் பதிவிற்கும் மற்றும் தகவலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1100** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.7

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் கொரோனா வைரஸ் **(covid 19)** என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் இறந்த உடலின் மீது மற்றும் அதன் வாகனம் செல்லும் பகுதி முழுவதும் இரு பக்கங்களில் தெளிக்கவும் மற்றும் இடுகாட்டு பகுதி முழுவதும் தெளிக்கவும் **Sodium Hydrocholorite** என்னும் கிருமி நாசினி தற்போது போதிய அளவு இருப்பு வைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதாலும், கொரோனா வைரஸ் தொற்று நோயினை கட்டுப்படுத்திட மத்திய மாநில அரசுகள் பிறப்பித்த 144 தடை உத்திரவு நடைமுறையில் இருந்தபடியால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லை என்பதால், பொது சுகாதாரம் பணியின் அவசர அவசியத்தை கருதியும், கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகரித்து வருவதாலும் தொற்று நோயினை கட்டுப்படுத்திட ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து **Sodium Hydrocholorite** என்னும் கிருமி நாசினி 1000 லிட்டர் கொள்முதல் செய்திட ஏற்கெனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனமான **Sri Balaji Marketing** நிறுவனத்தின் அதே விலைப்புள்ளிகளின்படி

கொள்முதல் செய்தமைக்கும் இதற்கென செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. **<u>ந.க. எண். 1900/2020/எச்1.</u>**

**அலுவலக குறிப்பு:–**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1101** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.8</u>

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், **(covid 19)** என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் அறிவுரையின்படியும் தினசரி நகராட்சி தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பினை கருதியும் களப்பணியாளர்களுக்கு மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட **(Cointainment Zone)** குடியிருப்புதாரர்கள் அலுவலகத்திற்கு அலுவல் வேலை காரணமாக வரும் பொது மக்களுக்கு வழங்கப்படும் முககவசம் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் முககவசம் மற்றும் பலமுறை உபயோகப்படுத்தப்படும் முககவசம் (Mask) மேலும், கொரோனா வைரஸ் தொற்று நோய் தாக்கத்தினை கட்டுப்படுத்த கபசுர குடிநீர் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி தரக்கூடிய வைட்டமின் மாத்திரைகள் (Combi Pack) தற்போது இருப்பு இல்லாததாலும் பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள சப்ளை செய்ய புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதமாகும் என்பதாலும் தற்போது அரசின் 144 தடை உத்திரவு நடைமுறையில் உள்ள நிலையில் மேலும், தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவும் காலமாக உள்ளதாலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, பணிகள் மேற்கொள்ளவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>ந.க. எண்.1865/2020/எச்1.</u>**

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்டபிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1102** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.9</u>

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (Covid 19) தொற்றுநோய் பரவாமல் தடுக்க நகராட்சி பகுதி முழுவதும் **லைசால்** என்னும் கிருமி நாசினி இருபக்கமும் தெளிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், மற்றும் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர், மற்றும் துணை இயக்குனர், பொது சுகாதாரம் திருவள்ளூர், ஆகியோரின் அறிவுரைகளின்படி சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும் , நகராட்சியில் போதிய அளவு **லைசால்** இருப்பு இல்லாததாலும் பணிகளின் அவசர அவசியத்தை கருதியும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதமாகும் என்பதாலும் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவும் காலமாக உள்ளதாலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஏற்கனவே லைசால் என்னும் கிருமி நாசினி சப்ளை

செய்ய குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனமான ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங் நிறுவனத்திடமே ஏற்கனவே வழங்கப்பட்ட விலைப்புள்ளிகளின்படியே **லைசால்** கிருமி நாசினி 3,000 லிட்டர் சப்ளை செய்ய உத்திரவு வழங்கவும், இதற்கென ஆகும் தோராய செலவீனம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1103** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.10</u>**

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் பரவாமல் தடுக்கவும், மற்றும் பேருந்து நிலையம் சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்த நகராட்சிகள் நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் அறிவுரைகளின்படி **சோப்பு கரைசல் (Hand Sanitation)** என்னும் கிருமி நாசினி போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து போதிய அளவு நகராட்சியில் இருப்பு இல்லாததாலும், பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும், மேலும் கொரோனா வைரஸ் – தொற்று நோய் வேகமாக பரவும் காலமாக உள்ளதாலும் உள்ளூர் மற்றும் வெளியூர், தனியார் நிறுவனங்களிடம் இருந்து ஏற்கனவே வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியை இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். நாள். படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது இதனை தொடர்ந்து அதே விலைவிகிதத்தின்படி சோப்பு கரைசல் (HAND WASHER) வாங்க பணிகள் மேற்கொள்ளவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1104** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**பொருள் எண்.11**

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (covid –19) தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் நகரராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –28 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் பல்வேறு கூட்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சியில் பல்வேறு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இந்நராட்சி 28.50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும் மேலும் சென்னை பெருமாநகராட்சியை ஒட்டிய நகராட்சியாகவும் இந்நகராட்சியின் மக்கள் தொகை சுமார் ஒரு இலட்சம் ஆகும். இந்நகராட்சியில் தூய்மை பணிகளுக்கு 24 நிரந்தர துப்புரவு பணியாளர்களை பணியிடங்கள் மட்டும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சிக்கு அளவு கோலின்படி (Norms) 316 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் இந்நிலையில் பணியாளர்கள் பற்றாக்குறையினால் நகராட்சிகள் நிர்வாக ஆணையர், சென்னை–5. அவர்களின் செயல் முறை ந.க.எண்25580/பி3/2015–1.. நாள்30.09.2015. –ன்படி வெளிக்கொணர்வு முறையில் 50 பணியாளர்கள் நியமித்து கொள்ள உத்திரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மானம் எண்.663, நாள்.31.01.2019 அனுமதியின்படி இவ்வலுவலக செயல்முறை **ந.க.எண்.198/2019/எச்1 நாள்.22.10.2018–** ன்படி **V.K Contractors** நிறுவனத்திற்கு 50 பணியாளர்களை (Out sourcing) வெளிகொணர்வு முறையில் சப்ளை செய்திட ஓர் ஆண்டிற்கு 07.06.2019 முதல் 06.06.2020 வரை அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், மேற்படி நிறுவனத்தின் செயல்பாடுகள் சிறந்த முறையில் ஒப்பந்த விதிகளுக்குட்பட்டும் உயர் அலுவலர்களின் உத்திரவுகளை பின்பற்றியும் பொது சுகாதாரப் பணியில் எவ்வித தொய்வும் ஏற்படாமல் பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் நல்ல முறையில் பணி புரிந்தமையாலும், இந்நகராட்சியில் தற்போது கொரோனா வைரஸ் அதிகமாக பரவி வருவதாலும் மேலும், தொற்று நோய் பாதித்து தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எண்ணிக்கை தினசரி அதிகமாகி வருவதாலும் பொது சுகாதார பணிகள் மேம்பாடு அடைந்திடவும் மற்றும் கண்காணித்திடவும், நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்பாதாலும் மேலும் தற்போது மத்திய மாநில அரசினால் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ள நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர வழிவகை இல்லாததால் ஏற்கனவே 50 துப்புரவு பணியாளர்களை சப்ளை செய்யப்பட்டு வரும் நிறுவனமான **V.K contractors** நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து 06.06.2020 முதல் 05.06.2021 வரை ஓர் ஆண்டிற்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தற்போது மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஊதிய விலைவிகிதத்தின்படி மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு கால நீட்டிப்பு செய்து 50 பணியாளர்களை தினசரி சப்ளை செய்திட உத்திரவு வழங்கவும், மேலும், இதற்கென ஆகும் செலவீனத்தை வருவாய் நிதியில் செலவீனம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1105** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.12**

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்று நோய் பரவல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் சுமார் 104 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வரப்படுகின்றனர். மேலும் இவர்களின் செயல்பாடுகளை கண்காணித்திடவும் அவர்களின் குடியிருப்பு மற்றும் அவர்களின் குடியிருப்பு பகுதிகள் சுற்றிலும் கொரோனா வைரஸ் தடுப்பு கிருமி நாசினியை தினசரி தெளிக்கவும் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் உபயோகப்படுத்தியதை பாதுகாப்பான முறையில் கையாளவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினசரி ஊதிய விகிதத்தின் அடிப்படையில் தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த முறையில் 20 தூய்மை பணியாளர்கள் பணி அமர்த்தி கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண். 1054 நாள். 31.03.2020 –ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து தற்போது நகராட்சி பகுதியில்

கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவி வருவதாலும் நோய் பாதிக்கப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டவர்கள் எண்ணிக்கை தினசரி கூடுதலாக வருவதால் சுகாதாரப் பணியை மேம்படுத்திட தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏற்கனவே 20 தூய்மை பணியாளர்கள் சப்ளை செய்யும் ஒப்பந்ததாரான **திரு.G. மதிவேலன்** என்பவர் மூலம் 01.05.2020 முதல் மேலும், கூடுதலாக 20 பணியாளர்கள் (ஆக மொத்தம் 40 பணியாளர்களை) ஒப்பந்த முறையில், பணியின் அவசர அவசியத்தை கருதி பணியாளர்களை தருவித்திடவும் மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிடவும் இதற்கென ஆகும் செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்று பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1106** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.13

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், (Covid-19) என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் பல்வேறு கொரோனா வைரஸ் தடுப்பு ஆய்வு கூட்ட அறிவுரையின்படியும் மேலும், நகராட்சி தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பினை கருதியும் களப்பணியாளர்களுக்கு மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட **(Cointainment Zone)** குடியிருப்புதாரர்கள் அலுவலகத்திற்கு அலுவல் வேலை காரணமாக வரும் பொது மக்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று நோய் தாக்கத்தினை கட்டுப்படுத்திடவும் காலை மற்றும் மாலை இருவேளைகளில் தனியார் வாகனங்களை பயன்படுத்தி கிருமி நாசினி தெளிக்க ஒப்பந்த அடிப்படையில் நாள் வாடகை அடிப்படையில் **டாடா ஏஸ்** வாகனங்கள் சப்ளை செய்து பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து பணிகள் மேற்கொண்டமைக்கும் இதற்கென செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

ந.க. எண்.2453/2020/எச்1.

**அலுவலக குறிப்பு:–**

அ) அவசர அவசியத்தினை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1107** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.14

இந்நகராட்சியில் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவுவதை தடுக்கவும், கிருமி நாசினி தெளிக்கவும் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தாக்கத்தினை கட்டுப்படுத்திடவும் காலை மற்றும் மாலை இருவேளைகளில் தனியார் வாகனங்களை பயன்படுத்தி தினசரி நாள் வாடகை அடிப்படையில் **டாடா ஏஸ்** வாகனங்கள் சப்ளை செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளின் (ஒரு வாகனத்திற்கு) ஒப்புநோக்கு பட்டியல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் அனுமதிக்கும்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | வாடகை வாகனம் | தொகை |
|---|---|---|---|
| 1 | **M/S. V.K Contractor**<br>No.63/23, Cholambedu Main Road,<br>Krishnapuram.Ambattur, Chennai- 600053. | TATA ACE வாகனம் ஒன்றுக்கு அனைத்து செலவுகள் உள்பட | ரூ.2800/– |

| | | | |
|---|---|---|---|
| 2 | **Santhosh Electricals**<br>No.1/8,D10 Road, Poombuhar Nagar, Ambattur, Chennai-53. | TATA ACE வாகனம் ஒன்றுக்கு அனைத்து செலவுகள் உள்பட | ரூ.2600/- |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **Santhosh Electricals** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும் மற்றும் பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம் .

**நகர்மன்ற தீர்மான எண்.1108 நாள்.18.05.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.15

நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் பாதித்த பகுதிகளில் தனியார் வாகனங்களை பயன்படுத்தி காலை மற்றும் மாலை இருவேளைகளில் கிருமி நாசினி தெளிக்க வேண்டியது அவசியமாகிறது என துப்புரவு ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, இந்நகராட்சியில் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகமாக பரவி வருவதாலும் மற்றும் இந்நோய் தொற்று பரவி தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்கள் மற்றும் அப்பகுதி மக்களுக்கு இத்தொற்று பரவாமல் தடுக்கவும் தனியார் **டாடா ஏஸ்** வாகனம் பயன்படுத்தி விரைந்து கிருமி நாசினி தெளிக்கவும் மேலும், கூடுதல் இடங்களில் கிருமி நாசினி தெளிக்க இயலும் என்பதாலும் தனியார் வாகனங்கள் தினசரி நாள் வாடகை அடிப்படையில் சப்ளை செய்ய 20.03.2020-ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு விலைப்புள்ளிகள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | வாடகை வாகனம் | தொகை |
|---|---|---|---|
| 1 | **Srinivas Waste Management Services (P) LTD**<br>F3, Harmony Enclave,No.8, M.P Avenue, Abbusali Street, Saligramam, Chennai -93. | TATA ACE வாகனம் ஒன்றுக்கு அனைத்து செலவுகள் உள்பட | ரூ.2600/- |
| 2 | **Mallika Agencies,**<br>No.18/13, 3 rd Main Road, Pukhraj Nagar, Madhavaram, Chennai-60. | TATA ACE வாகனம் ஒன்றுக்கு அனைத்து செலவுகள் உள்பட | ரூ.2700/- |

மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **Srinivas Waste Management Services (P) LTD** நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் அனுமதிக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்று பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1109 நாள்.18.05.2020**

**தீர்மானம் : பதியப்படுகிறது.**

---

## பொருள் எண்.16

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகாக விழிப்புணர்வு ஏற்படும் வகையில், நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் கொரோனா வைரஸ் பல்வேறு ஆய்வு கூட்ட அறிவுரையின்படியும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு குறித்த வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர், **ஸ்டார் ப்ளெக்ஸ் பேனர், பிரேமுடன் கூடிய ஸ்டார் பேனர், A4 Art Paper Multi Colour, A4 Paper Single Colour, A3 Paper Single**

**Colour, Bill Book A5 (200 Pages), Wall Poster, Star Flex Banner, Star Flex Banner 6x4, A4 Sticker, Masc Wearing Normal Banner Masc Wearing Normal Banner 2x3 Minimum** நோட்டீஸ் அச்சடித்து வழங்க தற்போது மத்திய மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட தற்போது வழிவகை இல்லை. எனவே, பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, உள்ளூர் மற்றும் வெயியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**ந.க. எண்.2381/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:—**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1110** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.17

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், **(covid 19)** என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திருவள்ளூர் மாவட்டம் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம், அவர்களின் அறிவுரையின்படியும் தினசரி பொது மக்களின் பாதுகாப்பினை கருதியும் மேலும், கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைபடுத்தப்பட்டுள்ள பகுதிகளில் காலை மற்றும் மாலை இரு வேளைகளில் **நீர்த்தசுண்ணாம்பு** என்னும் கிருமி நாசினி தெளிக்க அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து நகராட்சியில் போதிய அளவு இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டதால் உடனடியாக கொள்முதல் செய்யவும் மேலும், அரசின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லாததால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி கொரோனா வைரஸ் தொற்று நோயினை கட்டுப்படுத்திட பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **நீர்த்தசுண்ணாம்பு 10000 கிலோ** கொள்முதல் செய்திட உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**ந.க. எண்.1860/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:—**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1111** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.18

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், **(covid 19)** என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திருவள்ளூர் மாவட்டம் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம், அவர்களின் அறிவுரையின்படியும் தினசரி பொது மக்களின்

பாதுகாப்பினை கருதியும் மேலும், கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைபடுத்தப்பட்டுள்ள பகுதிகளில் காலை மற்றும் மாலை இரு வேளைகளில் **நீர்த்தசுண்ணாம்பு** என்னும் கிருமி நாசினி தெளிக்க அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து நகராட்சியில் போதிய அளவு இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டதால் உடனடியாக கொள்முதல் செய்யவும் மேலும், அரசின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லாததால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி கொரோனா வைரஸ் தொற்று நோயினை கட்டுப்படுத்திட பொது சுகாதார பணியின் பிரிவு 15—ன் கீழ் பணிகள் மேற்கொள்ள **நீர்த்தசுண்ணாம்பு 12000 கிலோ** கொள்முதல் செய்திட உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**ந.க. எண்.1865/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:—**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1112** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.19

இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவுவதை தடுக்க கிருமி நாசினி **நீர்த்த சுண்ணாம்பு நீர்** (10000 கிலோ) வாங்கிக்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் அனுமதிக்கும்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | நீர்த்த சுண்ணாம்பு | தொகை |
|---|---|---|---|
| 1 | **R.S.R எண்டர்பிரைசஸ்**<br>எண். 9/118, பழைய ஜி.எஸ்.டி ரோடு,<br>திலகவதி நகர், இரும்புலியூர்,<br>கிழக்கு தாம்பரம், சென்னை—59. | 1 கிலோ | 15.00 |
| 2 | **பாலாஜி அசோசியேட்ஸ்** ,<br>எண். 20பி, பெருமாள் கோவில் தெரு,<br>இரும்புலியூர்,மேற்கு தாம்பரம், சென்னை—45. | 1 கிலோ | 21.00 |
| 3 | **கிருத்திக் அசோசியேட்ஸ்** ,<br>எண்.13/3, தர்மதோட்டம் தெரு,<br>இரும்புலியூர், மேற்கு தாம்பரம், சென்னை—45. | 1 கிலோ | 24.00 |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான R.S.R எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும் மற்றும் பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம் .

**நகர்மன்ற தீர்மான எண்.1113** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.20

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் வேகமாக பரவி வருவதை தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் நோய் தடுப்பு விழிப்புணர்வு ஏற்படும் வகையில்,

நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திருவள்ளூர் மாவட்டம், நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் கொரோனா வைரஸ் தடுப்பு பல்வேறு கூட்ட அறிவுரைகளின்படி நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட வீடுகள் மற்றும் அப்பகுதியை சுற்றியுள்ள பகுதி முழுவதும் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், தற்போது மத்திய மாநில அரசுகளால் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பகுதி மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் **காய்கறிகள் பழங்கள் மற்றும் இதர பொருட்கள்** பாதுகாப்பான முறையில் வாங்கி வழங்கிட தினசரி நாள் வாடகைக்கு தனியார் வாகனங்கள் மற்றும் பணியாளர்கள் பணி அமர்த்திட ஆணையர், அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் இதற்கென ஆகும் செலவீனம் பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1956/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1114** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.21

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், **(covid 19)** என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திருவள்ளூர் மாவட்டம் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம், அவர்களின் கொரோனா வைரஸ் தடுப்பு பல்வேறு கூட்ட அறிவுரையின்படியும் தினசரி பொது மக்களின் பாதுகாப்பினை கருதியும் மேலும், கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைபடுத்தப்பட்டுள்ள பகுதிகளில் பொது சுகாதாரத்தை பேணவும், நகராட்சியில் **தளவாடப்பொருட்கள்** போதிய அளவு இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டதால் உடனடியாக கொள்முதல் செய்ய மேலும், அரசின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லாததால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி கொரோனா வைரஸ் தொற்று நோயினை கட்டுப்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து துப்புரவு ஆய்வாளரால் தன் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தளவாடப்பொருட்கள் கொள்முதல் செய்திட உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பொருட்கள் வாங்கிக்கொள்ளவும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**ந.க. எண்.1865/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1115** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.22

இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகமாக உள்ளதாலும் மற்றும் இத்தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்பாளர்கள் மற்றும் அப்பகுதி மக்களுக்கு அடிப்படை தேவையான உணவுப்பொருட்கள், காய்கறிகள், பழங்கள், மருந்து பொருட்கள் மற்றும் இதர தேவையான பொருட்கள் பாதுகாப்பான முறையில் வாங்கி வழங்கிட இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் வெளி நிறுவனத்தினை இப்பணிக்கு உட்படுத்திட பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி

அளிக்கப்பட்டதை தொடர்ந்து, பணியாளர்கள் சப்ளை செய்ய புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட தற்போது மத்திய மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு அமுலில் உள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லை என்பதாலும், நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எண்ணிக்கை தினசரி அதிகமாகி வருவதாலும், உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியதற்கும் மேலும், இதன்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஆணையர் அவர்களின் அனுமதிக்கும் மன்றத்தின் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. மேலும்,

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி** | **வாகனம் மற்றும் பணியாளர்கள்** | **நாள் ஒன்றுக்கு தொகை** |
|---|---|---|---|
| 1 | ஜி. மதிவேலன்<br>காண்ட்ராக்டர் மற்றும் சப்ளையர்ஸ்<br>எண்.5, ஏகாத்தம்மன் கோவில் தெரு,<br>தண்டுரை, பட்டாபிராம்,<br>சென்னை— 72. | 1 நபர் ஒருவருக்கு தினசரி ஊதியம் | ரூ.362/— |
| 2 | S.V.N எண்டர்பிரைசஸ்<br>எண்.55, பெருமாள் கோயில் தெரு,<br>பிள்ளையார் மடம்தாங்கள்,<br>திருவேற்காடு காட்டுபாக்கம்,<br>சென்னை—77. | 1 நபர் ஒருவருக்கு தினசரி ஊதியம் | ரூ.400/— |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய **திரு.ஜி.மதிவேலன்** அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மற்றும் பணி மேற்கொண்டமைக்கும் மேற்படி பணிக்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கும் பதிவு செய்யவும் மற்றும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம் .

**நகர்மன்ற தீர்மான எண்.1116** **நாள்.18.05.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**